இந்நூல் வாழ்வில் குறிக்கோள் ஏதும் அறியாது வாழ்ந்த எனக்கு நானும் வாழ்ந்து என்னை சார்ந்தவர்களையும் உயர்த்தி வாழ முன்னேற்றத்திற்கான குறிக்கோளை ஏற்படுத்தியது.

எந்த ஒரு செயலிலும் திறமையான அணுகுமுறையையும், குடும்ப அங்கத்தினர்களிடமும், நட்பு வட்டாரங்களிலும் சுமுகமான அணுகுமுறைகளை ஏற்படுத்தியும் அனைத்து செயல்களிலும் நல்ல முன்னேற்றத்தினையும், வெற்றியையும் ஏற்படுத்தி எனக்கு நல்ல உயர்வை தந்துள்ளது இந்நூல்.

சுயமுன்னேற்றமும் சமுதாய முன்னேற்றமும் ஏற்படுத்தும் இந்நூலை அரசானது நன்கு ஆராய்ந்து இதன் பயன் உணர்ந்து இதனை அனைத்து நிலைகளிலும் உள்ள அரசு கல்வி நிறுவனங்கள், நூலகங்கள் ஆகிய பல்வேறு துறைகளில் பயன்பெற செய்ய வேண்டிய வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும்.

**-பாலகிருஷ்ணன்,**
போடிநாயக்கனூர்

தங்களின் ஆளுமை வளர்ச்சி நூல் முன்னேறத் துடிப்போருக்கு ஒரு வழிகாட்டி, இளைஞர்களுக்கு இலக்கை அடைய உதவும் கைவிளக்கு. பயனுள்ள, சிறந்த, நல்ல நூல். இதைப் படிப்போர் உள்ளத்தில், நடத்தையில் பயனுள்ள மாற்றம் நிகழும்.

இன்னும் இதுபோன்ற நூல்கள் வெளியிடுக! வெல்க!! தொடரட்டும் தங்கள் தமிழ்ப்பணி!!!

**– வெ.விசயகுமார், தமிழாசிரியர்,**
உடுமலைப்பேட்டை

உங்கள் ஆளுமை வளர்ச்சி நூலும், நீங்கள் நடத்திய பயிற்சி பட்டறையில் கலந்துக் கொண்டதும் என்னை பெரிய அளவில் மாற்றியுள்ளது. அரசு பள்ளியில் ஆசிரியராக இருக்கும் எனக்கு புதிய சிந்தனை, புதிய உலகை ஆளுமை வளர்ச்சி நூலும், பயிற்சியும் காட்டியுள்ளது. என்னுள் உள்ள திறன்களை உணர்ந்து நானும் ஓவியம் மற்றும் கைவினை பொருட்களை செய்முறை பயிற்சி எடுக்க என்னுள் நம்பிகை பிறந்திருக்கிறது.

நூலை படித்த மறுநாள் எங்கள் உறவினர்களோடு ஒரு பேருந்து எடுத்துக்கொண்டு ஒரு திருமணத்திற்கு சென்று கொண்டிருந்தோம். வழியில் ஒரு கிராமத்தில் இரு உறவினர் இறங்கினர். 5 நிமிடத்தில் வருவதாக கூறி சென்றவர்கள் வழிதவறி